# தி.மு.க.வின் பவளவிழா நிறைவு ஆண்டு:

# ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கத்தின் நெடும் பயணம் 2

நேற்றைய தொடர்ச்சி...

1976 ஜனவரி 31-ல் தி.மு.கழக ஆட்சி முதன் முறையாகக் கலைக்கப்பட்டது. ஜனநாயகம் காக்கும் போரில் கழகம் முன்னேறியது. தமிழ்நாடெங்கும் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். 'அன்பகம்' கலைஞருக்கு இயக்ககம் ஆயிற்று.

அப்போது தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்தவர் மோகன்லால் சுகாதியா. ஆர்.வி.சுப்பிரமணியம், தவே ஆகிய உயர் அதிகாரிகள், ஆளுநரின் ஆலோசகர்களாக இருந்தார்கள். கழகத்தின் மீதும் தலைவரின் மீதும் குற்றச்சாட்டுகள் வெளிவந்த வண்ணம் இருந்தன.

அச்சு ஊடகங்கள் - நாளேடுகள் தணிக்கை செய்யப்பட்டன. முரசொலி வெளிவருவதில் சிக்கல்களை ஒன்றிய அரசின் வெளியீட்டு துறையினர் ஏற்படுத்தினர். கலைஞர் அதனை எதிர்கொண்டவிதமே சுவைமிக்க வரலாறுகளைக் கொண்டது.

நெருக்கடி நிலைக் காலத்தில் கலைஞர் அன்றாடம் 11.00 மணிக்குள் அன்பகம் வந்து விடுவார். கலைஞர் வந்து விட்டாரா என்று கேட்டுக் கொண்டுதான் பிற தலைவர்கள் வருவர். கழகத் தோழர்கள் எப்போதும் அன்பகத்தை மொய்த்துக் கொண்டு இருப்பர்.

'அன்பகம்' எதிரே இப்போது சாகித்திய அகாதெமி இயங்கும் கட்டடத்தில் அப்போது கீழ்ப் பகுதியில் 'தினகரன்' நாளேடு நடந்து வந்தது. அந்தக் கட்டடத்தின் கீழ்ப் பகுதியின் மறைவிடத்தில் ஒற்றர்கள் எப்போதும் இருப்பர். அன்பகத்தை கண்காணிப்பர்.

அன்பகத்தின் இருபுறங்களிலும் 100 அடிக்கு அப்பால் காவல் துறையின் வாகனங்கள் நிறுத்தப்பட்டு அச்சுறுத்திக் கொண்டு இருக்கும். அன்பகத்திற்கு வந்த தலைவர்கள், தோழர்கள் பெரும்பாலோர் இப்போது உயிருடன் இல்லை.

கழகம் தடை செய்யப்பட்டு விடும், கலைஞர் கைது செய்யப்பட்டுவிடுவார் என்ற செய்திகள் உலா வந்து கொண்டே இருந்தன. கைது செய்யப்பட்டவர்களை அண்ணா நினைவிடத்திற்கு வராதோர் பட்டியலின் மூலம் கலைஞர் வெளிப்படுத்தினார்.

கழகம் தடை செய்யப்பட்டுவிட்டால் என்ன செய்வது? அதற்காகப் பெயரையே மாற்றி விடலாம் என்று சில தலைவர்கள் யோசனை சொன்னார்கள் . கலைஞர் மிகத் துணிவாக அந்த யோசனையை ஏற்கவில்லை. பெயரை மாற்றிய கட்சி எது என்பது வாசகர்களுக்குத் தெரியும்.

ஏடுகள் நடத்த முடியவில்லை. கழகத்தினர் 500க்கு மேற்பட்டவர்கள் சிறையில்! பலவித அச்சந்தரும் செய்திகள் கழகத்திற்கு எதிராக உலவ விடப்பட்டன. சில தலைவர்கள் கலைஞரைத் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகும்படி வற்புறுத்தி வந்தனர். இவ்வளவு இடையூறுகளுக்கிடையே கலைஞர் நெருக்கடி நிலைக் காலத்தில் கழகத்தை நடத்தினார்.

கலைஞரின் கார் டிரைவர்கள் வேலையிலிருந்து நின்று விட்டனர். அவருக்கு டி.ஆர்.பாலு, கோவை மு.கண்ணப்பன் போன்றவர்கள் காரோட்டினார்கள். கைதுகள் தொடர்ந்ததால் எல்.கணேசன் தலைமைக் கழகத்தில் தங்கி பணியாற்ற வந்தார். ஆர்.எஸ்.பாரதி அன்றாடம் அன்பகத்தில் 'ஆஜராகி' விடுவார். டி.கே.சீனிவாசன் தினந்தோறும் வந்துவிடுவார்.

அலுவலக நிர்வாகி மு.சண்முகம் கலைஞரின் நிழலாய் நிர்வாகப் பணிகளில் இயங்கினார். வி.எம்.ஆர்.சபாபதி காரில் தினந்தோறும் உடன் சென்று கலைஞரை இராஜா அண்ணாமலைபுரம் வீட்டில் விட்டு விட்டுத் திரும்புவார். கலைஞர் எந்தத் தோழருக்கு என்ன வேலைதந்து இருக்கிறார் என்று ஒருவருக்கு ஒருவர் தெரியாது. அப்படிக் கழகத்தை இயக்கினார் கலைஞர்.

இக்கட்டுரையாளரான நமக்கும் சில பணிகளை வழங்கினார் கலைஞர். அது குறித்து 'நெஞ்சுக்கு நீதி' இரண்டாம் பாகத்தில் நினைவுகூர்ந்து இருக்கிறார். செ.கந்தப்பன், சட்டமன்ற உதவிச் செயலாளராக இருந்த மா.சண்முக சுப்ரமணியன் ஆங்கிலக் கடிதங்களை எழுதுவதும் பரிசீலிப்பதும் வரும் கடிதங்கள் குறித்து கலைஞரிடம் விவாதிப்பதுமாகப் பணியாற்றினார்கள்.

மயிலாப்பூரில் இருந்து வந்த ஜெயராமனுக்கு தினம் தேநீர் வாங்குவது பணியாக இருந்தது. 'அன்பகம்' சிக்னலில் கிழக்குப் பக்கம் இருக்கும் அமர்ஜோதி ஓட்டலிலிருந்து (இன்று லாட்ஜ்) தேநீர் தினம் அன்பகத்திற்கு ஜெயராமன் மூலம் வரும். காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணி வரை தோழர்களின் வருகை இருந்து கொண்டே இருக்கும்.

வெளிமாவட்டங்களிலிருந்து பேருந்து அமர்த்திக் கொண்டு கலைஞரைப் பார்க்க வரும் தோழர்களின் வருகை மிகவும் உணர்ச்சிகரமாக இருந்தது. அந்தக் காட்சி அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையை ஒத்ததாய் அமைந்தது. சில நேரங்களில் கலைஞர் வெகு நேரம் அன்பகத்தில் இருப்பார். சில நாள்களில் நண்பகல் உணவினை அன்பகத்திலேயே அருந்தி விட்டுப் பணியைத் தொடருவார். இப்படிப் பணி செய்ய யாரால் முடியும்.?

அறிஞர் அண்ணா காலத்தில் தி.மு.க.வை தடை செய்து அழிக்கப் பார்த்தார்கள். கலைஞர் காலத்தில் நெருக்கடிக் காலத்தைப் பயன்படுத்தி தி.மு.க.வை ஒழிக்கப் பார்த்தார்கள். அண்ணா கழகச் சட்டத்திட்ட விதிகளைத் திருத்தி கழகத்தைக் காப்பாற்றினார். கலைஞரோ 'துன்பம் உறவறினும் செய்க!' என்கிற குறள்மொழிக்கு இலக்கியமாய் நின்று கழகத்தினரைக் காப்பாற்றினார்.

நெருக்கடி நிலைக் காலத்திற்கு முடிவே இல்லையா? இன்னும் எவ்வளவு காலத்திற்கு இது தொடரும்? 'ஏன் என்றால் சிறைவாசம் 'இம்' என்றால் வனவாசம்' எனும் மொழிக்கு ஒரு பொருள் ஏற்படும் படியான நிலை நாட்டில் நீடித்தது. ஜனநாயக வெளிச்சம் எப்போது தெரியும் என மக்கள் எதிர்ப்பார்த்தனர்.

நெருக்கடி நிலையை அமல்படுத்திய இந்திராகாந்தி அவர் கட்சியின் மாநாட்டினை கவ்ஹாத்தியில் கூட்டினார். எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்றார். தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்ட கழகத் தோழர்கள் கொஞ்சம் கொஞ்சமாக விடுவிக்கப்பட்டார்கள்.

ஜனதா கட்சி உருவாயிற்று, அது உருவாக கலைஞரின் பங்களிப்பு பெரிதும் இருந்தது. 1977-இல் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் நடந்தது. வட சென்னை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து ஏ.வி.பி.ஆசைத்தம்பி மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனதாவின் சார்பாக பிரதமராக மொரார்ஜி தேசாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு நாவலரோடு சில கழகத்தினர் விலகினர். சில மாதங்கள் இந்தச் சர்ச்சைகள் தொடர்ந்தன. இது கழகத்தில் ஏற்பட்ட மூன்றாவது பிளவு. இதன் பிறகு சட்டமன்றத் தேர்தலை தி.மு.க. சந்தித்தது. கழகம் 48 இடங்களில் வெற்றி பெற்றது. தி.மு.க.வுக்கும் எம்.ஜி.ஆர். கட்சிக்கும் மொத்த வாக்குகளில் 8 இலட்சம் மட்டும்தான் வித்தியாசம்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு ஜனதா தி.மு.க.வோடு இல்லை. 1977 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.தனித்துச் சந்தித்தது. எம்.ஜி.ஆரால் தி.மு.க.வின் செல்வாக்கு முழுவதையும் துடைத்தெறிந்திட முடியவில்லை, தி.மு.க.வின் கொள்கை பலமும், அமைப்பின் கெட்டிமையும் கலைஞரின் தலைமையும் கழகத்தை எதிரிகளால் ஒன்றும் செய்திட முடியவில்லை. அதன் பணி தொடர்ந்தது.

கலைஞர் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார். 1977-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். ஊழல் குற்றச்சாட்டுகளால் திணறினார். விழுப்புரத்தில் சாதிகலவரத்தால் 13 ஆதி திராவிடர்கள் கொல்லப்பட்டனர். போலீஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எம்.ஜி.ஆரின் முதற்கட்ட ஆட்சி (1977-1980) பாராட்டும்படியாக இல்லை.

எம்.ஜி.ஆரின் முதற்கட்ட ஆட்சி கலைஞரையும் தி.மு.க.வையும் ஒடுக்குவதிலேயே கழிந்தது. எம்.ஜி.ஆர். ஆட்சி அமைந்த நான்காவது மாதத்தில் இந்திரா காந்தி தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்வதாக செய்தி வந்தது. அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு அவர் அப்போதுதான் தமிழ் நாட்டிற்கு வர இருக்கிறார்.

அவசர நிலைக்காலத்தில் தி.மு.க. பலத்த இழப்புகளைச் சந்தித்தது. சிட்டிபாபு, சாத்தூர் பாலகிருஷ்ணன் மரணம் அடைந்தனர். ஆகவே இந்திரா தமிழ்நாட்டிற்கு வருகை தந்தால் தி.மு.க. கருப்புக் கொடி காட்டுவது என்று முடிவு எடுத்து செயல்படுத்தியது.

இதனால் கலைஞர் உட்பட தி.மு.க.வினர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பெரு மழை பெய்து சென்னையில் பலர் வீடு இழந்தனர். கலைஞர் சிறையிலிருந்து நிவாரண நிதியைத் திரட்டினார். இப்போராட்டத்தின் விளைவாக 5 கழகத் தோழர்




கள் மரணம் அடைந்தனர். கழகத் தோழர் ஒருவர் கொல்லப்பட்டார். எம்.ஜி.ஆர். அரசுக்கு எதிராகச் சிறையில் இருந்தவாறு போராட்டத்தை அறிவித்தார் கலைஞர். கலைஞரும் தோழர்களும் உடனே விடுதலை செய்யப்பட்டனர்.

1979 செப்டம்பர் வாக்கில் தி.மு.க. எம்.ஜி.ஆர். கட்சியோடு இணைப்புப் பற்றி பிஜு பட்நாயக் ஏற்பாடு செய்தார். கலைஞர் எம்.ஜி.ஆர்.சந்திப்பு சென்னை அரசினர் விருந்தினர் மாளிகையில் நடைபெற்றது. கலைஞர் 5 அம்ச திட்டத்தோடு எம்.ஜி.ஆரைச் சந்தித்தார். இணைப்புப் பலன் அளிக்கவில்லை.

1980-இல் இந்திராகாந்தி மீண்டும் பிரதமர் ஆனார். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரைக் கலைஞர் போய் பார்த்தார். கலைஞர் 4 நாள்கள் டெல்லியில் தங்கி இருந்தார். பிரதமர் 9 மாநில ஆட்சிகளைக் கலைத்தார். அதிலொன்று தமிழ்நாடு.

1980 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. மீண்டும் எம்.ஜி.ஆர். முதல்வரானார். 1984 ஆம் ஆண்டுதேர்தலின் போது எம்.ஜி.ஆர். நோய்வாய்ப்பட்டு அமெரிக்காவில் இருந்தார். அவர் அங்கிருந்தே வேட்புமனு தாக்கல் செய்து வெற்றியும் பெற்றார். கலைஞர் எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்ந்தார். எம்.ஜி.ஆர். உடல் நலம் குன்றியே இயங்கி வந்தார்.

1980-ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க.வுக்கு 1977 தமிழகச் சட்டமன்றத் தேர்தலை விட குறைந்த இடங்களையே பெற முடிந்தது. தமிழகச் சட்டமன்றத்தில் கட்சிகள் பெற்ற இடங்களின் எண்ணிக்கை கீழ்க்காணும்படி இருந்தன.

**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்



| | |
|---|---|
| தி.மு.க. | - 38 |
| அ.தி.மு.க. | - 129 |
| சி.பி.ஐ. | - 10 |
| சி.பி.ஐ.(எம்) | - 11 |
| காங்கிரஸ் | - 30 |
| ஜனதா | - 2 |
| பார்வர்டு பிளாக் | - 1 |
| சுயேச்சைகள் | - 13 |
| | 234 |

அ.தி.மு.க.வின் ஆட்சி தொடர்ந்தது. தி.மு.க.வின் பணி கலைஞர் தலைமையில் அதே இயல்புபடி இயங்கத் தொடங்கியது.

எம்.ஜி.ஆர். ஆட்சியின் இரண்டாவது கட்டத்தில் (1980-1984) ஞானசௌந்திரி, இளஞ்செழியன், புட்லூர் தண்டபாணி என அரசியல் கொலைகள் நடந்தன. இக் கொலைகளைப் பற்றியெல்லாம் கலைஞர் சட்டமன்றத்தில் உரத்த குரல் எழுப்பினார். இக் கொலைகளை விட எம்.ஜி.ஆர்.ஆட்சியை உலுக்கிய கொலை திருச்செந்தூர் கோவில் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை கொலை செய்யப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டதாகும்.

சுப்பிரமணிய பிள்ளை சாவு குறித்து ஆராய, விசாரணை செய்ய கமிஷன் அமைக்கப்பட்டது. நீதிபதி பால் விசாரணை செய்து தனது அறிக்கையை 18.09.1981 இல் அளித்தார். அரசு வெளியிடாமல் இந்த அறிக்கையை கலைஞர் 24.11.1981 இல் வெளியிட்டார். இதனால் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். பெரிதும் பதற்றம் அடைந்தார்.

1983 ஜூனில் சாராயக் கலவை ஆலைகளுக்கு லைசென்சு வழங்கியதில் பயங்கர ஊழல் நடந்து இருக்கிறது என்று எம்.ஜி.ஆர். அரசின் மீது குற்றம் சாட்டி சட்டமன்றத்தில் கலைஞர் உரையாற்றினார். ஆகஸ்ட் மாதத்தில் ஈழப்பிரச்சினை மிக மோசமாயிற்று, இதனால் மத்திய அரசின் கவனத்தையும் அய்.நா. மன்றத்தையும் ஈர்ப்பதற்குரிய வகையில் தி.மு.கழகம் போராடத்தொடங்கியது. இதேசமயம்-இதேநோக்கத்திற்காகக் கலைஞரும் பேராசிரியரும் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகினர். 1984 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மதுரை, சேலம் 6-ஆவது மாவட்ட மாநாடுகள் கலைஞர் தலைமையில் நடைபெற்றன.

கலைஞர் 30.03.1984 இல் 32 வாக்குகள் பெற்று மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அவர் 23.04.1984 இல் பிற்பகல் 3.29க்கு மேலவை உறுப்பினராகப் பதவி ஏற்றுக் கொண்டார். அதுபோது கழக மேலவை உறுப்பினர்களாக எஸ்.ஜே.சாதிக்பாட்ஷா, பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன், க.மீனாட்சி சுந்தரம், எம்.பி.சங்கரலிங்கம், மிசா. ஆர்.கணேசன் ஆகியோர் இருந்தனர்.

1984 அக்டோபர் முதல் வாரத்தில் எம்.ஜி.ஆர். உடல் நலக் குறைவின் காரணமாக அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். மருத்துவமனை இருந்த பகுதியில் போலீஸ் குவிக்கப்பட்டு இருந்தது. சக அமைச்சர்கள் கூட முதல்வரைப் பார்க்க முடியாமல் இருந்தது. அப்போது கலைஞர் ஈரோடு மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டு இருந்தார். அதனை இரத்து செய்துவிட்டு சென்னைக்குத் திரும்பினார்,

சட்டமன்றத்தில் எம்.ஜி.ஆரின் உடல்நிலைக் குறித்து அறிக்கை வைக்க துரைமுருகன் தகவல் கோரி நிரம்பப் பேச வேண்டியிருந்தது. நாவலர், தற்காலிக பேரவைத் தலைவர் விளக்கம் அளித்தனர். கடைசியில் ஹண்டே இரண்டே வரியில் விளக்கம் அளித்தார்.

"முதல்வரின்உடல்நிலைமுன்னேற்றத்திற்குரியதாக இருக்கிறது. மகிழ்ச்சியாக இருக்கிறார், பேசுகிறார்" என்று ஆங்கிலத்தில் அறிக்கை அளித்தார்.

முதன் முதலாக 15.10.1984 இல் நாவலர் முதல்வர் எம்.ஜி.ஆர். உடல்நிலைக் குறித்த அறிக்கையைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். இதன் பிறகு தமிழகமெங்கும் வழிபாடுகளும், பிரார்த்தனைகளும் நடந்தன. 'நானும் பிரார்த்தனை செய்கிறேன்' எனும் கடிதத்தை 'முரசொலி'யில் கலைஞர் எழுதினார்.

பிரதமர் இந்திராகாந்தி மருத்துவமனையில் எம்.ஜி.ஆரைப் பார்த்தார். அமெரிக்காவில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என ஆலோசனை கூறினார். ஆனால் எம்.ஜி.ஆர். அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு செல்வதற்கு முன்பாகவே பிரதமர் இந்திரா காந்தி 31.10.1984 காலை 9:00 மணிக்கு சுட்டுக் கொல்லப்பட்டார். இப்படுகொலையைக் கண்டித்து 'வாழ்க இந்திரா வீழ்க வன்முறை!' என்று கலைஞர் எழுதினார்.

1984 அக்டோபர் 2ஆவது வாரத்தில் சட்டமன்றத்தில் எம்.ஜி.ஆரின் உடல்நிலைக் குறித்து பிரச்சினை எழுப்பியதன் விளைவு நவம்பர் முதல்வாரத்தில் எம்.ஜி.ஆரை நியூயார்க்குக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றனர்.

இந்திரா காந்தியின் மரணத்திற்குப் பிறகு நாடாளுமன்றத் தேர்தல் நடத்த வேண்டும் என்று ஒன்றிய அரசின் அமைச்சரவை முடிவு எடுத்தது. இந்த முடிவை அ.தி.மு.க.வும் வரவேற்றது. நாவலர் டெல்லி கூட்டத்தில் பங்கெடுத்து சட்டமன்றத்திற்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்றார். இது எம்.ஜி. ஆரின் விருப்பம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழகச் சட்டமன்றத்தினுடைய ஆயுட்காலம் 1985 ஜூன் வரை இருந்தது. இருப்பினும் தமிழகச் சட்டமன்றம் 15.11.1984 இல் கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்ட சட்டமன்றத்தில் தி.மு.க.வினர் 32 பேர் இருந்தனர்.

1984-ஆம் ஆண்டு தேர்தல் டிச.24, 27 என இரு கட்டங்களாக நடந்தன. எம்.ஜி.ஆர். நியூயார்க்கில் இருந்தார். அவரது வேட்புமனுவில் அவர் கையெழுத்திடா நிலையில் கட்டை விரலைப் பதிந்து வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி ...நாளை



திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தால் பூர்த்தி செய்து அனுப்பப்பட்டு, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட, புதிய கழக உறுப்பினர் அட்டைகளை, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன் வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் கோ.கண்ணன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, எஸ்.பன்னீர்செல்வம், பிரியா ப.விஜயரங்கன், ஆராஞ்சி ஆறுமுகம், சி.மாரிமுத்து, இரா.ராஜேந்திரன், பா.ராமஜெயம், சி.கே.அன்பு, ப.முருகையன் ஆகியோர் உள்ளனர்.



மதுரை மாநகர் மாவட்டம் காமராஜபுரம் பகுதி கழக மூத்த முன்னோடி, முன்னாள் பகுதி கழகச் செயலாளர் எம் எஸ் தெட்சிணாமூர்த்தி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி அன்னாரது திருவுருவப்படத்தை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் பகுதி செயலாளர்கள் ஆர்.எம்.முத்து, அன்வர் உசேன், வட்டச் செயலாளர்கள் சடையாண்டி, ஆங்கன்,சுரேஷ் பாலாஜி,தாமோதரன்,ரமேஷ், ரமேஷ் பாபு, பொன்வளவன் ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் செல்வி கார்மேகம், செந்தாமரைக்கண்ணன், அபுதாஹீர், கழக நிர்வாகிகள் கோபிநாத், தினேஷ்,சசி பிரவீன், செல்லம், கருணாநிதி மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.